உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 5 | 1923ஆம் ஏப்ரல்மீ | பகுதி 4

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம்
படிப்ப வர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி
யாம லிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள
விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது
நமக் கினியே.

—(கந்தரலங்காரம்.)

தாயுமானவர்

தாயுமான தயாபரனைப்பற்றி இரண்டாம் பகுதியில் படித்தோமல்லவா? அந்த ஜகதீசனுடைய திருவருளாலே தோன்றி அவனுடைய அருளாலே வளர்ந்து அவனுடைய அருளாலே அவனுக்கு அடிமையாகி அவன் அருளால் அவன் புகழ் பாடி உலகம் புகழ விளங்கியவர் தாயுமானவர்.

தாயுமானவருடைய தந்தை கேடிலியப்பிள்ளை என்னும் பெயர்கொண்ட வேளாளர் அவர் கல்வியிலும் கேள்வியிலும் சிறந்தவர், சிவபக்த சிரோமணி, அவர் சோழநாட்டில் வேதாரணியம் என்கிற சிவஸ்தலத்திலே வசித்து வந்தார் வேதாரணியத்திற்குத் திருமறைக்காடு என்று தமிழ்ப்பெயர் வழங்குவதுண்டு (வேதம்-மறை, ஆரணியம்-காடு)

(2) தாயுமான தயாபரனுடைய திருவருளால் கேடிலியப்பிள்ளை வேதாரணிய ஆலயதரும விசாரணைத்தொழிலை நடத்தி வந்தார். விஜயரங்க சொக்கநாத நாயகர் என்பவர் அக்காலத்தில் சோழபாண்டிய நாடுகளுக்கு அரசராக இருந்தார். அவர் மதுரைத் திருமலை நாயகருக்குப் பௌத்திரர். அந்த வேந்தன் கேடிலியப்பிள்ளையின் குணாதிசயங்களைக்கேட்டு அவரைத் தன

னிடம வரவழைதது மநதிரி உததியோகததில அமாத
தினன.

(3) தாயுமாயத தநதையுமாய யாவுமாய விளஙகும சாவஜீவ தயாபரமூாததியாகிய சிவபெருமானிடம அனபுடையவராகையினுல கேடிலியபபிளளை தமமுடைய வேலையில ஒருவித குறறஙகுறைகள வாராமல நிலையில நினறு நலல பேர பெறறூா அரசன அவரிடம தாயனைய கருணை காட்டி அவரை ஆதரிதது வநதான. அவருககுச சிவசிதமபரம எனறு ஒருபிளளையுணடு. அநதபபிளளையை அவா தமது தமையனுருககு ஸவீகாரம கொடுதது விடடாா பிறகு அவாககு மககடபேறு உணடாகவிலலை அதனுல அவா கவலை கொணடாா

தாயுமான தயாபரன அடியாாகளுடைய மனககவலையை நீககுகிறவனலலவா ?—

" தனககுவமையிலலாதான தாளசோநதாாககலலால
மனககவலை மாறறலரிது "—

எனறு தெயவப புலமைவாயநத திருவளளுவநாயனுா கூறியிருககிறூரலலவா ? கேடிலியபபிளளை ஞானவானுதலால அவரும அவருடைய மனைவியும தாயுமானவருடைய திருவடியையே சரணமாக அடைநதாாகள, எபபோதும அவரைத தியானிபபாாகள, துதிபபாாகள, அடிககடி ஆலயஞ சென்று ஐயன தரிசனம செயவாாகள.

4 தாயுமானவருடைய திருவருளால சில நாடகளுககுப பிறகு அவாககு ஓா ஆண குழநதை பிறநதது. தாயுமானவருடைய அருளாலே பிறநதமையினுல அநதக் குழநதைககுத் தாயுமானவா எனகிற அவருடைய திருபபெயரையே சூட்டினூா, அநத அருமைத

திருமகனை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார்.

5. தாயுமானவருடைய திருவருளால் உதித்தபடியால் தாயுமானவர் குழந்தைப் பருவத்திலேயே அதிசயிக்கத்தக்க அறிவுடையவராய் விளங்கினார். கேடிலியப்பிள்ளை அவரைத் தக்கவயதில் படிக்கவைத்தார். கொஞ்சகாலத்திற்குள் அவர் இறைவன் திருவருளால் தமிழ்ப்பாஷையிலே தேர்ச்சியடைந்தார்; பிறகு வடமொழியாகிய ஸம்ஸ்கிருதபாஷையிலும் தேர்ச்சிபெற்றார்.

6. தாயுமானவருடைய பதினாறாவது வயதில் அவருடைய தந்தை கேடிலியப்பிள்ளை காலஞ்சென்றார். தாயுமானவர் வயதிற் சிறியவரேயானாலும் அறிவிலே பெரியவராய் விளங்கியபடியால் அரசன் அவருக்கு அவர் தந்தை வகித்துவந்த உத்தியோகத்தைக் கொடுத்தான். ஸ்வாமிகளுக்கு அந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை. அதைவகிக்கத் தமக்கு அநுபோகம் போதாதென்பது அவருடைய அபிப்பிராயம். அரசன் அவரைக் கட்டாயப்படுத்தி அந்த உத்தியோகத்தைக் கொடுத்தான். அரசனுடைய பேச்சைத் தட்ட அஞ்சி அவர் அந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டார்.

7. தாயுமானவர் இவ்வாறு லௌகிகத் தொழிலில் பிரவேசித்தாராயினும் அவர் ஞானமடையு மார்க்கத்திலேயே சிந்தையுடையவராயிருந்தார். பிறவியால் பெறும் பயன் உண்மை நிலைகண்டு உயர்கதி அடைவதே என்று அவர் உணர்ந்தார். உண்மை நிலை, ஞானாசாரியருடைய திருவருளினாலே பெறவேண்டுமாதலால் தாயுமானவர்

அபபடிபபட்ட குருவை அடைய அவாவுடையவரா யிருநதார.

8. தாயுமானவர இவ்வாறிருககையில திரிசிரபுரம தாயுமானஸ்வாமி தரிசனததுககு மௌனகுரு ஸவாமி கள ஒருவர வநதார அவர திருமந்திரம் எனனும அரிய பெரிய நூலை இயறறியருளிய திருமூல நாயனார மரபிலே வநத மெயகண்டார எனபவரிடம ஞானோபதேசம பெறறமகான அவரைத தாயுமானவர தறசெயலாயக கணடனர கணடதும அவரிடததில அவருககு அன புணடாயிறறு மனமுருகியது. அவர அவருடைய திரு வருள நோககததின வசபபடடார உடனே அவருடைய திருவடியிலே அடியறற மரமபோல விழுநது பணிநது எழுநதார. அவருடைய கணகளிலே நீர தாரைதாரை யாகப பெருகியது.

9. தாயுமானவருடைய இநத நிலையைககணட மௌன ஸ்வாமிகள ஒனறும சொலலாமல அவவிடம விடடு நடநதார. தாயுமானவரும தொடரநதார. ஸ்வாமி கள தமமிஷ்டப்படி பல இடங்களுக்குச சென்றார. தாயு மானவரும விடாது பினபறறி அவரோடே போனார. ஸ்வாமிகள கடைசியில தாயுமான ஸவாமி கோயிலுக கூட செனறு அஙகே தக்ஷிணாமூரததி ஸநநிதியில பதமா சனமிட்டு உட்காரநதார.

10. தாயுமானவர அவரெதிரே கைகுவிததுப் பணிவாய் நினறார. ஸ்வாமிகள “ உனமனோ நிலை உணர நதேன. நீ இனனும் சிலகாலம இலலற நெறியை அநு ஷ்டிததுவா. பிறகு உனக்குப் புததிரபாக்யம சிததிக்

கும அபபால நான வநது உனனைககாணபேன" என்று கூறி எழுநது சென்றார

11 தாயுமானவா அவருடைய பிரிவைக கணடு மனம வருநதினார அதனை உணாநத மௌனகுரு சும்மாவிரு என்று கூறிச சென்றார தாயுமானவா அதையே பரம உபதேசமாககொணடார, அதைப பறறி அடிககடி சிநதிதது வநதார, குருவை யெணணி எணணி உருகததலைபபடடார, சுமமாவிரு என்ற அநத வாககியததை மௌனகுருவணககததிலே வைததுப பாடித துதிததார, அநத உபதேசமொழியை எடுதது அடிககடி சொலலி மனததைத தேறறிவநதார

12. தாயுமானவருடைய இநதப பரிசுததமான நிலையைககணட அரசன, அவரிடம பயபகதி விசுவாசங கொணடான அரணமனை உததியோகஸதரில ஒருவ ரெனபதையே மறநதான தாயுமானவரும லௌகிகவிசாரத தினை மறநதார, ஞான நெறியிலே சிறநது நினறார. அரசன அவாககு வேணடியவை யாவும அளிதது அவா மனமகிழுமபடி பணிசெயயத தலைபபடடான. அபபால ஒருநாள அரசன காலமானான

13 தாயுமானவா, பிறகு அரணமனையிலேயே இருநதுவநதார அரசனுடைய மனைவி மீனாட்சியமமை எனபவள் தன கணவனுடைய அரசை ஏற்றுககொண டாள. மீனாட்சி நல்ல குலததிலே பிறநதவள் ; நலலவா களோடு பழகியவள; உததம குணம வாயநத அரசனுககு மனைவியானவள இருநதும விதிவசததினால தாயுமான வரினமேல ஆசைகொண்டாள். அவரைப் பார்தது,

“ஸ்வாமி, இநத அரசை உமககே தநதேன என உடல், பொருள, ஆவியும உமமுடையனவே” எனறு பணிந தாள.

14. தாயுமானவா உடனே சிவசிவா எனறு செவி யிலே காம வைததுப பொததிப பின அநத மாதைப பாாதது, “இது சரியான எணணமலல இதைமற. மாதாகளுககுக கறபே சிறநதது அது அவாகளுககு இகபர நனமைகளைத தரும இதனாலேதான, தமிழ வேதம—

“பெணணிற பெருநதகக யாவுள கறபெனனுந திணமை யுணடாகப பெறின”

எனறு போதிததிருககிறது இவறறையெலலாம நீ அறியாயோ? அறிவாய, இருநதும இபபடி மயஙகியது உன வினைபபயனேயனறி வேறலல உலகமாயை எப படிபபடடவரையுமமயககவலலது அதறகிடமகொடாம விருபபதே அறிவாகும”—என இனனும பல நீதிகளைப போதிதது அநதமாதை ஞானமாாககததில திருபபினா

15. தாயுமானவாககு அதன பின அஙகிருகக மனம இடநதரவிலலை உடனே அவவிடம விடடுப புறபபடடு இராமநாதபுரததிறகுச சமீபததிலேயுளள தேவை எனகிற நகரததுககுச சென்று அஙகேவசிதது வநதாா. இதை அறிநத அவருடைய தமையனா, தமது சிறிய தாயாா புததிராாகிய அருளையபபிளளை யோடு தேவை நகாசெனறு தாயுமானவரைக கணடு, “குலமவிளஙக ஒரு மஙகையை விவாகம செயது கொளளவேணடும” எனறு கடடாயபபடுததினா.

16. தாயுமானவாககு ஸமஸார பநததததிறகடடுப்

பட விருப்பமில்லை. ஆயினும தமையனார சொல்லைத் தட்ட அஞ்சி விவாகம செய்து கொளளச சமமதிததார். பிறகு அவாககு விவாகம நடநதது. அபபால அவாக்கு ஒரு புததிரன பிறநதான. அவனுக்குத தாயுமானவா கனகசபாபதி என்று பெயரிட்டு அருமையாய் வளாதது வநதாா. அபபொழுது அவாக்கு, தாயுமானசுவாமி மலையில முனனே தரிசனந தநது சுமமாவிரு என்று உபதேசிததுச்சென்ற மௌன குரு ஸ்வாமிகள அஙகே வநதாா; தாயுமானவரின பககுவ நிலையைக கண்டு மனமகிழநது அவாககு யோக முறையை உபதேசிததுத துறவியாகுமபடி கடடளையிட்டுச சென்றாா

17. தாயுமானவா உடனே அனறைககே தமமுடைய மனைவி மைநதன, வீடுவாசல எலலாவறறையும துறநது கௌபீனதாரியாய வெளிபபட்டாா; தமமுடைய அநுபோகஙகளையெலலாம அவ்வபபோது கேட்போரும படிபபோரும மனமுருகி, எலலாம வலல இறைவன திருவடிககடிய ராகுமபடியான இனிய தமிழிற் பாடி வருவாரானாா.

18. தாயுமானவா பாடிய பாடலகளை யெல்லாம் அவரைவிட்டு அகலாமல பினதொடர்ந்துவந்த மாணவாகள எழுதிவநதாாகள். கடைசியில தாயுமானவா தேவை நகரிலே சமாதியடைந்தாா். அவருடைய கோவில அங்கு இபபொழுதும அடையாளமாக விளஙகுகிறது. தாயுமானவரின காலம சுமாா இருநூறு வருஷஙகளுககு முன இருககலாமென்று கணக்குச் சொலலுகிறாாகள்.

19. தாயுமானவருடைய பாடல்களைப்போல் பாடம்

இனி எவரும பாடமுடியாதெனறும சொலலலாம. அவருடைய பாடல்களால தமிழுலகம எநதக் காலததிலும் சிவஞானப பேறு பெறுமெனபதி லையிலலை. ஆகையினால தாயுமானவரின பரமோபகாரம எனறும மறக்கத தககதனறு.

20 தாயுமானவா எலலோரும இனபநிலையில் இருககவேணடுமெனகிற உயாநத கருததுடையவா. அதை அவா,

“எல்லோரும இனபுற் றிருகக நினைபபதுவே
அலலாமல வேறொன றறியேன பராபரமே” என்று

பராபரககண்ணியில பாடியிருககிறா. அவா சுதத சைவா, பரமசாநதசொரூபி, பெருஙகருணைத திருவாளா. எலலோாககும இனசொலலால புததிபுகடடுவோா; அறியாதாருடைய புனசெயலகண்டு இரஙகுவோா; எவரையும நிநதிதது ஒதுககாா இநத மகானுடைய நலல உபதேச வழி நிற்பவாககு எனறுங குறைவுவராது.

ஆததுமததைச சுததிசெயாா ஆசாரத தால்பயனென
பாததிரத்தைச சுததிசெயாா பாகமெவன—எததுறநல
சித்தசுத்தி செயயாா சிவபூசை யாலபயனென
வித்தமுறு வேமா விளமபு

(வேமன நீதிவெண்பா)

ஆத்துமத்தை—ஆதமாவை, பாகம எவன—சமையலாலென்னபயன்; விததம—ஞானசசெலவம.

கற்பின் பெருமை

"கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்று ஔவையார் அருளிச் செய்தனர். இதனால் பொய்பேசாமையே கற்பு என்று தெளிவாய்ப் புலப்படுகிறது. கற்புக்குரிய லக்ஷணங்களெல்லாம் பொய்பேசாமையில் அடங்கி விட்டமையால், பொய்பேசாமையே கற்பு என்று சொல்ல ஒரு சிறிதுந் தடையில்லை. இது பெண்பாலாருக்கேயன்றி ஆண்பாலாருக்கும் பொருந்தியது. இயற்கையிலேயே பேதைமைக் குணத்தை ஆபரணமாகப் பெற்றுள்ள பெண்மக்களுக்கு எச்சரிப்பு அடிக்கடி வேண்டியிருந்ததினால், கற்பு என்பது இத்தன்மையதென்று பலபடித்திறங்களில் அதை விஸ்தாரமாக எடுத்துப் பேசி, அக்கற்பைக் காக்கும் விஷயத்தில் அவர்கள் விழிப்பாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்திவரலாயிற்று.

பெண்கள் தனித்திருப்பதும், சிலசமயங்களில், பேதைமை காரணமாகக் கெடுதியை உண்டுபண்ணக் கூடுமென்னுங் கருத்தால், கூடாதென்பது பெரியோர்களின் துணிபு. அதுபற்றியே அவர்களுக்குக் காவலும் ஏற்படுத்தப்பட்டது. "காவல்தானே பாவையர்க்கழகு" என்று ஔவைப் பெருமாட்டியே கூறியிருக்கிறார். கன்னிகையாயிருக்குங் காலத்தில் அவர்கள் பெற்றோர் வசத்திலும், கலியாணமானபின் கணவர்வசத்திலும், கணவர்க்குப்

பின் பிள்ளைகள் வசத்திலும், பிள்ளைகள் இல்லாவிட்டால் உடன்பிறந்தார் வசத்திலும் இருக்கவேண்டும்.

கலியாணமான பிறகு அவர்கள் பெற்றோர் உற்றோர் முதலானவரை விட்டுக் கணவரையே கதியென்றடுத்து அவர் சொல்லுக்கு எதிர்பேசாமல் கீழ்ப்படிந்து பக்தி விநயத்தோடு நடந்து வரவேண்டும். எந்தப்பணி (வேலை)யால் தமது கணவர் இன்புறுவாரென்றோ அந்தப்பணியை உடனுக்குடன் பணிவோடு செய்து அவர்களைச் சந்தோஷப்படுத்தி வருவதையே தம்முடைய முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டும். ஊசியும் சரடும்போலிருந்து உதவி புரிந்து வரவேண்டும். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்கிற நான்கு குணங்களினின்றும் ஒருபோதும் வழுவுதல் கூடாது. அச்சமாவது என்றும் காணாததைக் கண்டவிடத்துப் பயப்படுதல், நாணம் என்பது வெட்கங்கொண்டிருத்தல், மடமாவது சகலமும் அறிந்தவிடத்தும் அறியாது போல அடங்கியிருத்தல், பயிர்ப்பு—கணவரல்லாதாருடைய கைமேற்படின் உடம்பு அருவருப்படைதல்—

கணவர் பூசையிலிருக்கும்போது அவரைக் குருவாகப் பாவித்து அந்தப்பூசைக்கு வேண்டிய வற்றைத் தாம் சிஷ்யராயிருந்து நடத்தவேண்டும், சந்தோஷமாயிருக்குங்காலத்தில் அவரை மன்மதனாக நினைத்துத் தாம் ரதியாயிருந்து ஒழுகவேண்டும், மற்றகாலங்களில் அவரைத் தெய்வமாக எண்ணி அவருடைய சேஷத்தை அமுதாக உண்டு நதியாடல், விரதமிருத்தல், தேவதா தரிசனஞ் செய்தல் முதலிய சகலகிரியைகளையும் அவருடைய பாத தரிசனத்துக்குச் சமமென்று அனுசரித்து வரவேண்டும்.

சுததிபததியுடன,கடலின ஆழததைப பாாததுவா எனறு கணவா கனவில சொனன போதிலும உடனே சென்று செய்யும படியான மனோதிடததைக கொளளவேண்டும. விருநதோமபல, சுறறநதழுவல, மககளைப பாதுகாததல முதலிய குடும்பவிவகாரஙகளையும மனததளா வடையாமல கவனிக்க வலல உததமியராயிருகக வேண்டும. இவாகளே கறபுக கரசியராவாாகள. அததகையோா செய்யும தருமங களே மழைவளததுககும உலகசேஷமததுககும ஆதார மாகும—

“ . ... மாதரார
அறபில நினறன அறஙகள அனனவா
கறபில நினறன காலமாரியே”

எனபது சததிய வாககல்லவா ?

இவவாறு நடநது வநதவரும வருபவருமான ஸ்திரீ ரதனஙகள இருபபதாலனறோ நலலா ரொருவா உளரேல அவா பொருட்டு எலலாாககும பெய்யும மழை எனகிற படி பூமியானது நாளது பரியநதம கூடியவரையில ஒழுங கான நிலையில இருநது வருகிறது. அநதப பதிவிரதா சிரோமணிகளின பெருமையைபபேச யாவரால ஆகும ?

“ முககணாதணடலை நாட்டில கறபுடையோா பெரு மைமொழிந திடிலொருததி, ஒகுமெரி குளிரவைத தாள ஒருததியில வேடனை யெரிததாள் ஒருததிமூவா, பககுற அமுதளிததாள ஒருததி எழுபரியவனை இணங கவைததாள், கொககெனவே நினைததனையோ கொங கணவா எனறொருததி கூறினளே.—

எரி—அக்கினி; அமுது —பால்; எழுபரியவன்-சூரியன் (ஏழுகுதிரை பூட்டிய ரதத்தை யுடையவன்)—

என்னும் பாடலானது அப்பதி விரதைகளின் பெருமையை விளக்குகின்றது.—

இப்பாடலின்படி அக்கினியைக் குளிரவைத்தவள் சந்திரமதி, வேடனை எரித்தவள் தமயந்தி, மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கிப் பால் கொடுத்தவள் அநசூயை, சூரியனை உதயமாகாமலிருக்கும்படி வேண்டியவள் நளாயனி, கொக்கென்று நினைத்தனையோ என்று கேட்டவள் வாசுகி.

இப்படிப்பட்ட அற்புதங்களைக் காட்டிய பெண்மணிகள் இன்னும் அநேகருண்டு—

கற்பின் பெருமை இவ்வாறிருப்பதால் நமது பெண்மணிகள் இதைக் கவனித்துத் தாங்களும் இவ்வண்ணம் பெருமை யடையும் வழியில் நடக்க முயற்சி செய்வார்களாக. கணவர் சொற்படி நடப்பதே அவர்கள் அனுசரிக்க வேண்டிய முயற்சியாம்.—

இதுசம்பந்தமாகப் பத்மாவதி என்னும் ஜெயதேவர் பாரியாளின் சரித்திரத்தை அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம்.—

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

பிறர் குற்றங்களைப் பாராட்டாதே!
பிறர் பெருமையைமாத்திரம் பேசு
உன்னைப்போலவே பிறரையும் எண்
உத்தமனாயிரு

பெண்புத்தி கேட்ட பீமன்

ஒரு வித்துவான் ஓர் அரசனிடம் போய் அவன் புகழைப் பாடினான். அரசன் விலையுயர்ந்த மாணிக்கம் ஒன்றை வித்துவானுக்குத் தந்தான். அதை அரசனுடைய அரண்மனை வேலைக்காரி பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் தன் வீட்டிற்குப் போனதும் தன் புருஷன் பீமனை அழைத்து, "எத்தனை நாள் இப்படி தரித்திரத்திலே கஷ்டப்படுகிறது! இதைப் பற்றி உங்களுக்குக் கவலையே கிடையாது. நான் எத்தனை நாள் உழைத்துச் சாவது? இந்த நம்முடைய தரித்திரம் தீரவேண்டுமானால் நீங்கள் நானின்று சொல்லுகிறபடி நடக்கவேண்டும்" என்றாள்.

பீமன் பேரளவில் பீமனே தவிர பலத்தில் பீமனல்ல, பலஹீனன், சாது, நல்ல புத்தியுடையவன். அவனுக்குக் கொஞ்சம் நிலமிருக்கிறது. அதில் உழுது பயிர் செய்து அவன் ஜீவித்துவந்தான். குடும்பத்துக்கு அதில் வரும் வரும்படி கட்டவில்லை. அதனாலே கஷ்டம். பீமனுக்குப் பயிர்த்தொழில் தவிர வேறு தொழில் தெரியாது. பீமனுடைய மனைவி நல்ல சாமர்த்தியக்காரி, எட்டு ஊரை விலைக்கு வாங்குவாள், ஆகையினால் அவன் அவளுக்கு அடங்கியவனானான்.

அவள் "இன்று நான் சொல்லுகிறபடி நடக்க

வேண்டும்" என்றவுடன் பீமன் "அடி! என்ன அப்படிச் சொல்லுகிறாய்? என்றைக்கு உன் பேச்சை நான் தட்டினேன், இன்றைக்குத் தட்ட? மகாராஜியை என்றைக்குத் தொட்டுத் தாலிகட்டினேனோ அன்றைக்கே அவிடத்துத் தாஸனாயிவிட்டேனே இன்னுமென்ன?" என்றான்.

அவள் "இந்தக் குறும்புப் பேச்சுப் பேசத்தெரியுமே ஒழிய காரியத்தில் ஒன்றையுங்காணோம் இருக்கட்டும்—நான் சொல்லுகிறபடி நட—கேள்—அரண்மனைக்கு இன்று ஒரு வித்துவான் வந்திருந்தான். அவனுக்கு மகாராஜா ஒரு மாணிக்கம் தந்தார் அதை நான் என் கண்ணாலே பார்த்தேன் அந்த வித்துவான் இப்பொழுது அரண்மனையிலிருந்து புறப்பட்டுப் போகிறான் ஓடிப்போய் அவனை வழியில் மடக்கிக்கொண்டு அந்த மாணிக்கத்தைப் பிடுங்கிவா! நமது தரித்திரம் அதமாய்விடும் தரித்திரத்தை ஒழிக்க இதைத்தவிர வேறு வழியில்லை" என்றாள்.

பீமன், இதைக் கேட்டு நும ஆந்தைபோல் விழித்தான், "அந்தோ! நான் பிழைத்த பிழைப்பு வழிப்பறி செய்யும்படியாய் முடிந்ததே" என்று எண்ணி ஆலோசித்தான் அவன் மனைவி, "என்ன ஆந்தையாய் விழிக்கிறாய்? அவலமே, தொலை சீக்கிரம்" என்றாள் பீமன், "அந்தோ தரித்திரமே, உன்னுடைய ஆக்ஞையாவிது?" என்று எழுந்து விரைவாய்ப்போய் வித்துவானை ஒரு காட்டில் மடக்கிக்கொண்டான்.

பகல் வேளையாயிருந்தாலும் அது ஊருக்குப் புறம்பான காட்டானபடியால் அங்கே ஜனசஞ்சாரமில்லாமலிருந்

தது. விததுவான அநத வழியில பயநதுகொண்டே தான போகிறான. மடியிலே கனமிருக்கிறதல்லவா? பீமன அவனை மடககியதும் விததுவான திடுககிட்டு நின றான. பீமன அவனைப பாாதது, "நீ இபபொழுது அரண் மனையிலே வெகுமதியாகப பெற்ற மாணிககததைக கொடுததுவிடு இலலாவிட்டால உனனை விடமாட டேன" என்றான

விததுவான, உடனே தன மடியில வைததிருநத மாணிககததை யெடுதது வாயிலபோட்டு மடககென்று விழுஙகிவிட்டான பீமன, "உனனை இபபொழுது குமமாங குததுக குததி மாணிககததைக ககக வைப பேன. நீயே ககிவிடு அதை" என்றான. இதை அருகி லிருநத வேடன கேட்டு ஓடிவநது, "மாணிககததை கொடுககிறீாகளா இலலாவிட்டால இநத என கை ஈட் டிககு உஙகளை இரையாககி அதையெடுததுக கொள ளட்டுமா'" என்று கேட்டான.

விததுவான சிவசிவா என்று சொலலிககொணடு பகவானை நினைததபடி நின்றுவிட்டான. பீமன, "ஐயோ, நாம விததுவானைக காட்டிக கொடுககவேணடும. காட டிக கொடுததால அவன வயிற்றிலுளள மாணிககததைக கைபபற்றுவதற்காக வேடன அவனைக கொலவான? விததுவான நமமாலிறபபானே தவிர நமககு ஒரு பயனு மிலலை. ஆதலால இதற்கு ஒரு யுகதி செயகிறேன" என்று எணணிககொணடு வேடனைப பாாதது, சிறு நகை நகைதது, "நாஙகளிருவரும மாமன மைததுனா. அத னால வேடிககையாகப பேசிககொணடோம. அதைக கேட்டுககொணடு நீ வநது விட்டாயே" என்றான.

[illegible] (115 [illegible])

அவன சொன்னது உண்மையென்று மனதிற்பட்டது. அது விததுவானைப் பிடிதத நல்ல வேளைதான்; உடனே வேடன நகைதது, வழியில மாமன மைத்துனன் இபபடி விளையாட்டுக்குப பேசிககொள்வது கூடாது எனபதை உஙகளுககு அறிவிக்க எண்ணிததான நான வநதேன, தெரிநததா? இனி இபபடிபபட்ட பரிகாசம உதவாது" என்று சொலலித தான அபகரிகக வநததை யுகதியாய் மறைததுப பேசித தன வேலையைக கவனிக்கப போய்விட்டான

அவன போனதும பீமனுககு நலல புததி வநது விட்டது.—சை—திருட்டுப பிழைபபு ஒருபிழைப்பா? நானொரு மடையன. பெணபுததியினால இதறகுத துணிந தேன. எனனபுததி எனபுததி" என்று எணணி விததுவானிடம தனமனைவியின குணததையும தனவறுமை யையும கூறிபபணிநதான.

விததுவான அவனமீது இரககஙகொணடு, "இருக கட்டும்; நீ கவலைபபடாதே! நீமனித இயலபுக கேற்றதே செய்தாய்; உனமனைவியும தவறு செயதாளிலலை உனககு; நலல காலததால எனனையுங காததாய்; உனனையும காததுக கொணடாய். அபபனே, நீ சொனனபடி நாமிருவரும, இனறுமுதல மாமன மைததுனனாகவே இருபபோம. வாழவில தாழ்வில இருவரும ஒததுப போவோம. ஒனறு கேள! நானொரு கவி சொலலிக கொடுககிறேன. அதை உஙகளூா அரசனைத தவிர வேறு எநத அரசனிடமாவது போய்ப பாடு. அநத அரசன உனனை விததுவானென மதிதது வெகுமதியளிப்பான. அதைப பெறறுக்கொண்டு சுகமாயிரு' என்றான.

பீமன் அவனைப்பணிந்து, "வித்துவானுடைய மைத்துனன் வித்துவானுனன்" என்று பதிற்சொல்லி வித்துவானை மகிழ்வித்தான். வித்துவான் உடனே ஒரு பாட்டுப்பாடி அதை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தான். பீமன் புத்திசாலியானதால் உடனே கிரகித்துக்கொண்டு வித்துவானைப் பார்த்து, "மாமா போய் வாருங்கள்" என்று கூறிப் பணிந்து விடைகொடுத்தான். வித்துவானும், "மைத்துனு, க்ஷேமமாயிரு" என்று ஆசீர்வதித்துச் சென்றான்.

பிறகு பீமன் அந்தக்கவியை வேந்தனொருவன் சமூகத்தில் பாடினான். அதைக்கேட்டு வேந்தன் சந்தோஷமடைந்து பீமனுக்குத் தக்க வெகுமதி தந்தான். வெகுமதிபெற்றதும் பீமன், "ஓகோ, கல்விக்குள்ள மகிமை எதற்கும் கிடையாது. தெரியாமலா கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்று கூறியிருக்கிறார்கள்" என்று கல்வியின் பெருமை யுணர்ந்து அன்றுமுதல் தினம் கொஞ்சமேனும் ஏதாவது படித்துத் தெரிந்து கொள்வதென்கிற பிரதிக்ஞை வைத்துக் கொண்டான்; மனைவியிடம் கொண்டுபோய்த் தான் பெற்ற வெகுமதியைத் தந்து நடந்தவைகளை யெல்லாம் அவளுக்குச் சொல்லி அவளையும் திருத்தினான். ஆனால் அவளுக்குப் புருஷனை அடக்கியாண்டு வந்த பொல்லாத குணமட்டும் போகவில்லை. நெடுநாட் பழக்கமல்லவா? பழக்கம் கொடியதன்றோ? தெரியாமலா தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று சொல்லுகிறார்கள் பெரியோர்கள்?

கிறிஸ்துவ மார்க்கம்

கானான் தேசத்தில் ஒருசமயம் பஞ்சமுண்டாயிற்று. அந்ததேசத்தைச் சார்ந்த பெத்லெகேம் என்னும் ஊரில் வசித்த எலிமெலேக்கு என்பவனும் அவன் பெண்சாதி நாகோமி என்பவளும் தங்களுடைய இரண்டு பிள்ளைகளுடன் மோவாப் தேசம்போய் வாசம் பண்ணினார்கள். அங்கே அவர்களுடைய குமாரர்களிருவருக்கும் விவாகமாயிற்று. மணந்த பெண்களில் ஒருத்தியின் பெயர் ஓர்பாள், இன்னொருத்தியின் பெயர் ரூத்.

அப்பால் அவர்களில் எலிமெலேக்கும் அவன் குமாரர்களும் இறந்து போனார்கள். நாகோமி விதவையாய் விட்டபடியால் தன் தேசத்துக்குப்போக யத்தனித்தாள். அப்பொழுது அவள் தன் மருமக்களைப்பார்த்து, "நீங்கள் உங்கள் பெற்றோர்களிடம் போய்ச் சுகமாயிருங்கள்" என்றாள். ஓர்பாள் என்பவள் மாமியை முத்தஞ்செய்து விட்டுத் தன் தாய் தந்தையரிடம் போனாள். ரூத் அப்படிச் செய்யவில்லை. அவள் நாகோமியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "நான் உம்மைவிட்டு விலகேன்; நீர்போகிற இடத்துக்கு நானும் வருவேன். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம். உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" என்று சொன்னாள்.

நாகோமி அவளிடம் சந்தோஷங்கொண்டு தன்னோடு அவளைப் பெத்லெகேமுக்கு அழைத்துப் போனாள். ரூத்தின் இந்த அருமையான குணங்கண்டு எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். கர்த்தர் அவள்மீது இரக்கங்கொண்டு ஆதரித்தார்.

கணவனுடைய உறவும் ஊருமே ஒருகுலஸ்திரீக்கு அவளுடைய உறவும் ஊரும் ஆகுமல்லது தாய்வீட்டுறவும் ஊரும் அவளுடையவை ஆகா'—இந்தப்பரம இரகஸ்யத்தை இக்கதை விளக்குகின்றமையினால் குலஸ்திரீகள் எந்தக்காலத்திலும் எந்தநிலைமையிலும் கணவனுடைய வம்சத்தையே பற்றி நிற்கவேண்டுமென்றறிக.

(7) ஸ்ரீ ராமாவதாரம்

(74-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு விசுவாமித்திரர் இராஜ புத்திரர்களோடு தாம் யாகம் புரிவதற்குரிய இடத்தை நோக்கி அழைத்துக் கொண்டு போயினர். இரண்டு காத தூரம் சென்றதும் வழியில் 'ஓ' வென்கிற பெருஞ்சத்த மொன்று அவர்கள் செவியிலே பட்டது. ஸ்ரீராமபிரான் அச்சத்தம் யாதென்று முனிவரை வினவினன். கோசிகர் "ஸ்ரீராமா! இங்கொரு நதியோடுகின்றது, அது மிகவும் பரிசுத்தம் வாய்ந்தது. தன்னிற் படிவோரது பாவங்களனைத்தையும் தீயிலிட்ட பஞ்சுபோலே போக்கிச் சுகப்பேற்றைத் தரவல்லது. கோமதி யென்னும் பெயரையுடையது. அப்புனிதநதி சரயுவென்னும் மகாநதியுடன் வந்து சங்கமமாகும் இடம் இதுவாதலால், இங்கு இச்சத்தம் உண்டாகின்றது" என்றார்.

தசரத தநயன் ஆச்சரியமுற்றுக் "கோமதி யென்னும் புண்ணிய நதியின் வரலாறு யாது" என்று முனிவர்பிரானைக் கேட்க, அவர் சொல்லுவாராயினர்.

பிரமதேவனது மானஸ புத்திரராகிய குசனென்னும் மகாராஜனுக்கு, குசன் குசநாபன் முதலிய நான்கு பிள்ளைகள் பிறந்தனர். குசநாபர் வயசடைந்து மனைவியை

பெற்றபின் நூறு பெண்மணிகளை யீன்றெடுத்தார். இப்பெண்ணரசியரின் சௌந்தரியத்தைக் கண்ட வாயுபகவான் அவர்களிடஞ் சென்று, தம்மை மணந்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். அவர்கள், தங்கள் தந்தையுத்தரவின்றி அது முடியாதென்று பதிலளித்தார்கள். அதனால் கோபங் கொண்ட வாயுதேவன் அவர்களைக் கூனியராக்கித் தமது லோகஞ் சார்ந்தார்.

இதைக் கேள்வியுற்ற குசநாபர் உடனே தமது புத்திரிகள் நூறுபேரையும் பிரமதத்தன் என்னும் தவச் செல்வருக்கு மணம்புரிவித்தார் பிரமதத்தருடைய கைப் பரிசம் பட்டமாத்திரத்தில் அப்பெண்கள் யாவரும் கூன் நிமிர்ந்து முன்னிலும் அதிக அழகை அடைந்தனர். நெடுங்காலம் தமக்குப் புத்திரபாக்கியம் கிடையாமையால் பிரமதத்தர் தவஞ்செய்யலுற்றார் அந்தத் தவத்தின் பயனாகக் அவருக்குக் காதியென்பவர் பிறந்தார் இவரிடம் இராஜ்யபாரத்தை ஒப்புவித்துப் பிரமதத்தர் சுவர்க்கலோகஞ் சென்றார் அந்தக் காதியென்பவருக்கு முதல் முதல் யானும் கவுஸிகை என்னும் எனது சகோதரியும் பிறந்தோம் கவுஸிகை இருசிக னென்பவருக்கு வாழ்க்கைத்துணையானாள் இருசிகர் சிலகாலம் அரசாண்டு பிரமலோகம் போயினர் போகும்போது கவுஸிகை யென்பவள் நதிரூபமாக மேல்நோக்கிச் சென்று "தன்னைத் தனியேவிட்டுப் பிரிவது தகுமோ?" என்று தன் கணவரைக் கேட்க 'நீ நதிவடிவாகப் பூதலத்திலிருந்து உன்னிற் படிபவருக்கு இகபர பேற்றை யுதவிப் பெருமையடைந்து வாக்கடவாய்" என்று கட்டளையிட்டு நீங்கினர். அக்கவுஸிகையே இங்கு நதியாக ஓடுகின்றாள்.

அந்தந்தி சாயுவுடன இங்கு கூடுகினறது" என்று கோசி கா கூறினா.

அநந்தரம சிறிது தூரம மூவரும போனதும ஓரழகிய சோலையைக கண்ணுறறனா. அசசோலையின பிரபாவதனதயும தெரிவித தருளவேணடு மென்று, முனிவா பெருமானைத தாசரதி கேட்டனன.

முனிவா "ஸ்ரீராமா! இநத இடம மிகவும மகததுவம பொருநதியது முனனொரு காலததில, "எஙகள ஈனமறைககுந தேவ ரறிவிறகும பிறாககு மெட்டாச, செஙகண மால இருநது" தவவொழுககததைத நடததிக காட்டிய இடம இதுவே அபபோது மகாபலி யென னுஞ சகரவாததி அரசு செயதுவநதான. தேவாகளிமூ வேணடுகோளுக கிசைநது பகவான வாமன ரூபியாய அவனை யாடகொணடருளினா" என்று சொலலிக கொணடே இராமலட்சுமணாகளைத தமது யாகசாலைககு அழைததுக கொணடுபோனா.

அஙகு மகரிஷியான விசுவாமிததிரா செயயப புகுநத யாகததைத தசரததநய ரிருவரும கண்ணை இமைகாபபது போலக காததருளினா. யாகம இடையூறினறி முடிவு பெறறதும கௌசிகா அவ்விருவரையும ஜனகம காராஜன செய்யும வேள்வியைககாண மிதிலாபுரிககு அழைததுக கொண்டேகினா.

வழியில ஸ்ரீராம பிரானுடைய திருவடித தூளின பரிசததால ஒரு கருஙகற்பாறையானது பெண்வடிவம பெற்று நினறது. அதைககண்ட மகரிஷி ஸ்ரீ ரகுநாயகனை அனபுடன நோக்கி,

" *** இனி இந்த உலகுக்கெல்லாம்
உய்ய வண்ணமன்றி மற்றோர் துயர் வண்ணமுறுவதுண்டோ
மைவண்ணத்தரக்கி போரில் மழைவண்ணத்தண்ணலேயுன்
கைவண்ணம் அங்குக்கண்டேன், கால்வண்ணம் இங்குக்கண்
[டேன் "

என்று புகழ்ந்தனர்.

பிறகு " ஸ்ரீராமா! இவ்வுத்தமிதான் அகலிகை என்பவள், 'கௌதம ரிஷியின் பத்தினி; தனக்குரிய கருமத்தினின்றும் சிறிது வழுவிய காரணத்தால் கல்லாயினள். உனது திருவடிப் பரிசத்தால் பழையவடிவத்தை யடைந்தாள்" என்று கூறி அத்தேவியைக் கௌதமர் வசம் ஒப்புவித்து மூவரும் மிதிலையை யடைந்தனர்.

இவர்களைக் கண்ட மிதிலா புரியானது கொடிகளாகிற தன் கைகளால் வரவேற்கலுற்றது. மூவரும் அப்பட்டணத்தின் அற்புதக் காட்சியனைத்தையும் ஆனந்தமாகப் பார்வையிட்டுவந்தனர். இராஜவீதியில் அரண்மனை மேன்மாடியில் அச்சமயம் சீதாபிராட்டி தன் சகிமார்களுடன் உலாவிக்கொண்டிருந்தாள். அப்பெண்ணரசியை ஸ்ரீராமபிரான் தன் கண்கொண்டு நோக்கலுற்றான். பிராட்டியும் அதேசமயத்தில் ஸ்ரீரகுநந்தனனைத் தன் கண்களால் நோக்க நோக்கத்து இப்படி இருவர் நோக்கும் ஒன்றுபடவே இருவரும் ஒருவரை யொருவர் தமக்குள் வியந்து பேசத் தொடங்கினர்.

விசுவாமித்திரர் ஸ்ரீ ராமலட்சுமணரை ஜனக மகாராஜனது கொலுமண்டபத்திற்குக் கூட்டிச் சென்றனர். முனிபுங்கவரைக் கண்டதும் ஜனகமகாராஜன் எதிர் நோக்கிச்சென்று வந்தனை வழிபாடுடன் அவரை அவரு

டன் வந்தவரோடு அழைத்துவந்து பொற் பீடத்தில் அமரச்செய்தான்.

மகரிஷி அந்த ராஜேந்திரனுக்கு சூரியகுலத்தின் பெருமையையும் ஸ்ரீராமலட்சுமணரின் வரலாற்றையும் விரிவாக எடுத்துரைத்தார். முனிவர் சொல்வதை ஜனகபூபதி கேட்கும்போது அவ்வேந்தனது கண்கள் ஸ்ரீராமபிரானுடைய திருமேனியழகில் ஈடுபட்டிருந்தன. இதைக் குறிப்பாலுணர்ந்த முனிவர் அவ்வரசனை நோக்கி,

*" அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் உரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி "

ஆகவே,

× " விநயம் வேறில்லை விறல்புனை தயரதனென்பான்
தநயர் மற்றிவன் தனுவலி காண்குறச் சமைந்தார் "

என்றார்.

உடனே மிதிலை வேந்தன் தன்னிடத்திலுள்ள வில்லைக் கொண்டுவரக் கட்டளையிட்டான். அறுபதினாயிரம் பேர் சென்று அந்த வில்லைப் பெருங்கஷ்டத்துடன் எடுத்துக்கொண்டுவந்தார்கள். அவ்வில்லை ஸ்ரீராமபிரான் ஒரு நொடிப்போதில் கிஞ்சிற்றும் சிரமமின்றி வளைத்தொடித்தான். இந்த ஓசையைக் கேட்டதும் எல்லோரும் சந்தோஷக் கடலில் மூழ்கலாயினர். விவாகச் சடங்

* **ஆண்டகை-ஸ்ரீராமன்; கனல்-தீ; வாளி-பாணம்**

× **விநயம் - காரியம்; விறல் - வெற்றி; புனை-கொண்ட; தநு-வில்; சமைந்தார்-வந்தார்கள்**

குக் குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அயோத்திக் கும் தூது போயிற்று அங்குள்ளார் யாவரும் திரண்டு வந்தனர். நகரமுற்றும் தெய்வலோகமும் நாணும்படி அலங்கரிக்கப்பெற்றது. வாத்தியங்கள் பல முழங்கலா யின. முனிவர்கள் ஓமம் வளர்த்தினர் வேதமந்திரங் கள் உத்கோஷிக்கப்பெற்றன மணப்பீடத்தில் மணமக னாகிய ஸ்ரீராமபிரானும், மணமகளான சீதாபிராட்டியும் உத்தமமான பட்டுப்பீதாம்பர பூஷணாதியலங்காரத்து டன் வீற்றிருக்கலாயினர்

இப்போது மணமகனும் பிராட்டியும் பொருந்திய * போகத்தையும், யோகத்தையும் ஒத்து விளங்கினர். அப்போது,

† "கோமகன்முன்ஜனகன் குளிர்நன்னீர்
பூமகளும் பொருளும் என நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி யென்னுத
தாமரையன்ன தடக்கையினீந்தான்"

அந்தணர் ஆசி கூறினர் அவருடைய தேவிமார் பல் லாண்டு பாடினர் மற்றவரனைவரும் வாழ்த்தெடுத்தனர். தேவர்கள் புஷ்பவருஷத்தையும், அரசர்கள் சொர்ண வருஷத்தையும், ஏனையவர் முத்து வருஷத்தையும்

* போகம்-போின்ப சுகம் (ஸ்ரீராமன்), யோகம்-சாதன மானதியானம் (சீதாபிராட்டி) - இறைவியை முன்னிட்டுக் கொண்டு இறைவனையடைய வேண்டுதலின் இவ்வாறு உவ மிக்கலாயிற்று

† கோமகன்-ஸ்ரீராமன், பூமகளும் பொருளும்-திருமக ளும் இக பர ஐசுவரியங்கள் இரண்டுமே—மாமகள்-சீதை, மன் னுதி-பொருந்தி வாழ்வாயாக, தடக்கை-விசாலமான கை

அமோகமாக வருஷித்தனர். ஸ்ரீராமபிரான் மந்திர பூர்வமாக ஆகுதிகளைச் செய்து பிராட்டியின் திருக்கரத்தைப் பிடித்தருளினன். இச்சமயம் பிராட்டி மாறுந்தன்மையையுடைய பிறப்புகளில் உடல்கள் உயிர்களைத் தொடர்ந்தேறப்பதை ஒத்திருந்தாள். பின்னர் வேள்வித்தீயை வலம்வந்து, பொரியிட்டு, அம்மி மிதித்து, அருந்ததி கண்டு, பெரியோர்களை வணங்கி ஸ்ரீராமபிரானும் பிராட்டியும் மாளிகையிற் பிரவேசித்தனர்.

இக்காலத்தில் இலட்சுமணபரத சத்ருக்னர்களுக்கும் ஜனகமகாராஜன் தன் தம்பியின் பெண்களை விதிப்படி மணஞ்செய்வித்தான் தான தருமங்கள் வழங்கப் பெற்றனர். சிலநாள் கழிந்து தயரத சக்ரவர்த்தி தன் மக்கள் மருகியருடனும் மற்றவருடனும் ஜனகனிடம் விடை பெற்றுக்கொண்டு அயோத்திக்குத் திரும்பினன்

(வரும்)

மூன்று முழுப்பொய்யர்கள் ஓரிடத்தில் சந்தித்தபோது தங்களுக்குள் யார்பெரியபொய் சொல்லவல்லார் என்பதைப் பற்றிப் பந்தயம்போட்டுக்கொண்டார்கள் அப்பொழுது அவர்களில் ஒருவன்—“பார்த்தீர்களா பட்டணம் லைட்ஹௌஸ் சிகரத்தை! இங்கிருந்து 400-மைல் தூரத்திலிருந்தாலும், எவ்வளவு நன்றாயக் காணப்படுகிறது” என்று சொன்னன் “அந்தச்சிகரத்தின்மேல் ஒருகாக்கை அமர்ந்திருக்கிறது அது உமக்குக் காணப்படவில்லை போலும்!” என்று வேறொருவன் பரிகசித்தான். “அந்தக்காக்கை கூப்பிடுகிறது கேட்டீரா?” என்று வினவி மூன்றாவன் மற்ற இருவர் வாயையும் அடக்கினன்.

குறிப்பு:—ஸீதா கல்யாணபடம் அடுத்த சஞ்சிகையில் வரும்.

ஹாஸ்யம்

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா, கும்பகோணம் கஸ்பா சோலையப்பன் தெருவிலிருக்கும் காமவல்லியம்மாள் குமாரர்கள் அணைக்குட்டி சாஸ்திரி 1 இளையபெருமாளையங்கார் 2 சோணாசலம் பிள்ளை 3 வஞ்சிப் பத்தர் 4. வீராசாமிசர் 5 காதர் பாச்சா சாகிப் 6 மிஸ்டர் ஜான்புல் (Mr John Bull) 7. ஆகிய நாங்கள் ஏழு சகோதரர்களும் மனப்பூர்வமாய் எழுதிக் கொண்ட பாக தஸ்தாவேஜு என்னவென்றால் தஞ்சாவூர் ஜில்லா விளாங்குடி கிராமத்தில் ஷை காமவல்லியம்மாளின் முதல் புருஷன் திருநாராயண சாஸ்திரியின் பேரால் பட்டாவாயிருக்கும் நஞ்சை நிலங்கள் ஷையார் குமாரர் அணைக்குட்டி சாஸ்திரிக்கும், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் ஷை காமவல்லியம்மாளின் இரண்டாவது புருஷன் பெரிய பெருமாளையங்கார் பேரால் நடந்துவரும் நித்யப்படி கட்டளை வரும்படி ஷையார் குமாரர் இளைய பெருமாளையங்காருக்கும், திருநெல்வேலி ஜில்லா கன்னியாகுமரி முனையில் ஷை காமவல்லியம்மாளின் 3-வது புருஷன் சொக்கலிங்கம் பிள்ளை நடத்தி வந்த சொக்கலிங்கம் பிள்ளை கம்பெனி ஷையார் குமாரன் சோணாசலம் பிள்ளைக்கும் லெத்திவாடி கிராமத்தில் விசுவப்பிராமண வீதியில் ஷை காமவல்லியம்மாளின் 4-வது புருஷன் அந்தோணிசாமி பத்தர் பெயரால் பந்தோபஸ்துப் பாதுகாப்

பாக வைததிருககும வைரககல நகைகள் ஷெயாா குமாரா வஞ்சிப் பததருக்கும, சிககததமபூரில ஷெ காமவலலியமமாளின 5-வது புருஷன கநதசாமிசா நடததிவநத சாராயககடையைச் சோநத சகல சொததுககளும ஷெயாருககுப பிறநத வீராசாமிசாவுககும, புலியூரில ஷெ காமவலலியமமாளின 6-வது புருஷன இஸமால ராவுததா நடததிவநத தோலகிடஙகு ஷெ யாருககுப பிறநத காதாபாசசா சாகிபிறகும, களளககுடி மாாகெட சூபெரினடெணடெணடாயிருநத ஷெ காமவலலியமமாளின 7-வது புருஷன மிஸடா ஸடோன எனபவாின பேரால மதராஸபாஙகியில போடடிருக்கும கவானமெணடு பிராமிசாி நோடடுகள ஷெயாருககுப பிறநத மிஸடா ஜானபுலலுககும சேரவேணடியது ஷெ காமவலலியமமாளின உததரகிாியையை 7 பிளளைகளும ஒததிருநது நடததிவிட வேணடும.

இநதபபடிககு நாஙகள 7 சகோதராகளும மனமொபபி எழுதிககொணட பாகத தஸதாவேஜு.

நோடகளே:—பாஸு ஸிவில கலியாணமசோதா (Basu Civil Marriage Bill) சடடமாக அஙகீகாிககப படடிருககு மானுல மேலே குறிபபிடடிருககிறபடி பாகத தஸதா வேஜுககள எழுதபபடும விநோததைதயும பாாகக நோநதிருககும

கடவுளின் அடியாரைக்
கடவுளென்றே பூசியுங்கள்.

ஓணான் ஸம்ஸார வாழ்க்கை.

ஒரு ஊரில் ஓர் ஓணான் இருந்தது. அதற்கு ஒரு நண்டு, ஒரு கட்டெறும்பு, ஒரு வண்டு, ஒரு கொக்கு, ஒரு காகம், இப்படி ஐந்து பெண்சாதிகள் இருந்தன அவைகளோடு சுகமாக வாழ்ந்துகொண் டிருக்கும்போது நண்டு காப்பமாகி பிரஸவத்திற்கு வரப்பருகில் இருந்த தன் தாய்வீடு போயிருந்தது. ஒருநாள் கட்டெறும்பு நண்டின் பிறந்த வீட்டுக்குப்போய்த் திரும்பிவந்து வண்டினிடத்தில் நண்டு சுகமாய் பிரஸவித்த சேதியைச் சொல்லிற்று. வண்டு வரிசையுடன் நண்டினிடம் போய்

"நண்டே பெருந்தேவி
அம்பி பிறந்தானோ
அழுது கிடந்தானோ
குழிதோண்டும் கையாலே
மூலைதாங்கி உண்டானோ"

என்று விசாரித்தது. அதற்கு நண்டு

"தும்பி, தும்பி, தூணைத் துளைப்பாய்
காட்டு வண்டே கல்லைத் துளைப்பாய்
நீயா என்குலத்தை வசை வந்தாய்
கொண்டுவந்த சாமானைக் கூடத்தில் வைத்துவிட்டு
தலைக்கடையாலே வந்தவள் புறக்கடையாலே போய்
விடு"

என்று சொல்லிற்று. வண்டு கோபமாய்க் கொக்கினிடம் ஓடிவந்து "கேட்டையா சேதி, நான்

பொன்னு பொன்னு மஞ்சள குளித்து
பொனனுந தூணிலே சாய்நது கொண்டு
தேவனுருககுக கஞசி வாாக கையிலே
கட்டெறும்பு எனகிற காட்டாணி வநது
அஙகசசி ஆணபிளளை பெறறுளே எனக"

நான

"சுககுக கொண்டு மிளகு கொண்டு
சூலடிக கஞசு பணமுங கொண்டு
நாயின தலையில நல வெண்ணெயும
பூனையின தலையில பூணடுங கருபபுட்டியும
இததனையுங கொண்டு காணப போனேன"

என்று சொலலித தான அஙகு சொன்னதையும அதற்கு அது சொனன பதிலையும சொலலி முறையிட்டது. அதறகுக கொககு [ளாட்டி

"சொலலுவள சொலலுவள சொரணை கெட்டவள
சொலலாளே என்று எணணவும வேண்டாம
கொககுக கழுததுககுக காரையைப பூட்டினால
அதுவு மெததனை அழகாயிருககுமே"

என்று என்னையே சொனனுளே, உன்னைச சொலலக கேட்பானேன?" என்றது பிறகு காகததினிடம போய் முறையிட காகம, [ளாட்டி

"சொலலுவள சொலலுவள சொரணை கெட்ட வெள
சொலலாளே என்று எணணவும வேணடாம்
கருதத காலுககுப பாடகததை இட்டால
அதுவு மெததனை அழகா யிருககுமே"

என்று என்னையே சொனனுளே, உன்னைசசொல்லக கேட்பானேன?" என்றது. (மாதா மனோரஞ்சனி.)

அறநெறிக்கும்மி

(தொடர்ச்சி)

நம்மிட்டத்திற் பிறர் நடக்க விரும்புமோர்
நல்லவழியிலே நாமும் பிறர்
தம்மிட்டத் தென்றும் தவறாமல் நடப்பதே
தருமவழியடி தையல்மின்னே (9)

கோபமும் தாபமும் பொய்யும் புரட்டும்
கோளும் பகையும் கொடிய தெனும்
லோபமும் சோம்பலும் பேருண்டியும் பொல்லாப்
பாபமாங் கொள்ளாதே பைந்தொடியே (10)

சத்தியம் நாணம் பொறுமை அடக்கம்
தாழ்மை மடமச்சம் நயமின்சொல்
பத்திமை கற்பு பழியஞ்சல் இவையெல்லாம்
பார்புகழ் புண்ணியமாம் பைங்கிளியே (11)

மனமெனும் குரங்கை அடக்கவேணும் என்றும்
மானத்தைப் பெரிதாய்க் காக்கவேணும்
தினமுங் கடவுளைத் துதிக்கவேணும் இவை
நேமனே பேரறமாகுமடி (12)

இல்லையெனச் சொல்லும் இரப்போர்க் கீவதே
எல்லாருங் கொள்ளுமோர் நல்லறமாம்
வில்லை யனைய புருவமெழில் மாதே
விரும்பித் தினமிதைச் செய்வாயடி (13)

(வரும்)

S. R. கணபதி சுப்ரமணிய அய்யர்,
தமிழ்ப் பண்டிதர்,
போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

திருக்குறள்

அறத்துப்பால்

பாயிரம்

இரண்டாம் அதிகாரம்.—வான்சிறப்பு.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று (1)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை (2)

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி (3)

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால் (4)

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. (5)

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. (6)

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின் (7)

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு (8)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். (9)

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. (10)



[illegible] 170 [illegible]